**<u>2018 ம் ஆண்டு ஜனவரி மாதம் 25.01.2018 ம் தேதி வியாழக்கிழமை பிற்பகல் 04.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்பு கூட்ட பொருள்</u>**

==================================================================

**1)** திண்டுக்கல் மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவு ஜே.சி.பி. வாகனம் முருக பவனம் கலவை உரக்கிடங்கு மற்றும் 48 வார்டுகளிலும் வடிகால் தூர்வாரும் பணிகள் மற்றும் இதர பகுதிகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. கடந்த நவம்பர் 2017ம் ஆண்டில் மேற்படி ஜே.சி.பி வாகனம் சர்வீஸ் செய்ய விலைப்புள்ளி பெறப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு 29.11.2017ல் வாகனம் திரும்பப் பெறப்பட்டது. அப்பணியில் ஜே.சி.பியின் முன்பக்க டயர் செட் மாற்றம் செய்ய தெரிவிக்கப்பட்டது. ஆனால் டயர் இருப்பில் இல்லாத காரணத்தினால் டயர்கள் மாற்றம் செய்யப்படவில்லை. தற்பொழுது மழை வெள்ளப் பணிகள் மற்றும் எம்ஜிஆர் நூற்றாண்டு விழாவில் பணிகள் முடிக்கப்பட்ட நிலையில், டயரில் வெடிப்பு ஏற்பட்டு பழுதாகியுள்ளது. எனவே பணியின் அவசர அவசியம் கருதி வாகனத்தின் முன்பக்க டயர்களைப் புதிதாக மாற்றம் செய்திட ஜெயராஜ் ஆட்டோ மொபைல்ஸ், மதுரை என்ற நிறுவனத்திற்கு சப்ளை உத்திரவு வழங்கவும், அதற்கான உத்தேச செலவு தொகை ரூ. 40,000/—ற்கு (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 12716 /2017/எச்1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 940</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**2)** இம் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளின் கீழ் பூச்சிநாயக்கன்பட்டி ஞானபிரகாசபுரத்தில் அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு 11.01.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | திருமதி.ஜெ.மாலா | 4.98 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.9000/– மதிப்புள்ள சேமிப்பு பத்திரம் |
| 2) | திரு.எஸ்.அமல்ராஜ் | 24.98 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.9000/– மதிப்புள்ள சேமிப்பு பத்திரம் |

(ந.க.எண். 7951 / 2014 / இ4 )

<u>அ.குறிப்பு</u>

1) ரூ.9,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண்.910 நாள் 13.11.2017 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளன. பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஜெ.மாலா, ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) மேலும் கூடுதலாகும் செலவினத் தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

<u>**தீர்மானம் எண்: 941**</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**3)** இம் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளின் கீழ் காசிமலி நகர், வினோபாஜி நகரில் அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு 11.01.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | திருமதி.ஜெ.மாலா | 4.98 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.9000/– மதிப்புள்ள சேமிப்பு பத்திரம் |
| 2) | திரு.எஸ்.அமல்ராஜ் | 24.98 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.9000/– மதிப்புள்ள சேமிப்பு பத்திரம் |

(ந.க.எண். 7951 / 2014 / இ4 )

அ.குறிப்பு

1) ரூ.9,00,000/— மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண்.910 நாள் 13.11.2017 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளன. பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை கருத்தில் கொண்டும் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஜெ.மாலா, ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) மேலும் கூடுதலாகும் செலவினத் தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**தீர்மானம் எண்: 942** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

4) இம் மாநகராட்சியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டப் பணிகளின் கீழ் காசிமலி நகர், பர்மா காலனியில் அங்கன்வாடி மையம் கட்டும் பணிக்கு 11.01.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ. எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | திருமதி.ஜெ.மாலா | 4.98 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.9000/— மதிப்புள்ள சேமிப்பு பத்திரம் |
| 2) | திரு.எஸ்.அமல்ராஜ் | 24.98 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.9000/— மதிப்புள்ள சேமிப்பு பத்திரம் |

(ந.க.எண். 7951 / 2014 / இ4 )

அ.குறிப்பு

1) ரூ.9,00,000/— மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண்.910 நாள் 13.11.2017 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளன. பணியின் அவசர அவசியம் கருதியும், மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதினால் ஏற்படும் காலதாமதத்தை கருத்தில்

கொண்டும் வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.ஜெ.மாலா, ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) மேலும் கூடுதலாகும் செலவினத் தொகையினை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 943</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

5) இம் மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு சாலை அபிவிருத்தித்திட்டம் 2017–18 (TURIP 2017-18) Providing BT Surface / Paver Block at Ward Nos. 2,3,4,5,8,9,11,15 - PACKAGE No. I பணிக்கு 03.01.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1) திரு. என். ராஜசேகரன்
2) திரு. எஸ்.வெள்ளைச்சாமி

முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் 10.1.2018 ஆம் தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 11.1.2018 மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

1) திரு. என். ராஜசேகரன் – 4.80 % மதிப்பீட்டை விட கூடுதல்
2) திரு. எஸ்.வெள்ளைச்சாமி – 12.80 % மதிப்பீட்டை விட கூடுதல்

பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.80 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. என். ராஜசேகரன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.16516 / 2017 / இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1) ஷை பணிக்கு ரூ.464.86 இலட்சம் இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 21422/ 2017/ இ3, நாள் 3.10.2017 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

2) பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.80 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. என். ராஜசேகரன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மானம் எண்: 944** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

**6)** இம் மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு சாலை அபிவிருத்தித்திட்டம் 2017–18 (TURIP 2017-18) Providing BT Surface / Paver Block at Ward Nos. 12,14, 17, 20, 21, 25, 26, 29, 30, 34, 37, 38, 39, 40, 41, 45, 46, 47- PACKAGE No.II பணிக்கு 03.01.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1) திருமதி.வி.மீனாள்
2) திரு. ஏ.ராமையா

முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் 10.1.2018 ஆம் தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 11.1.2018 மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரர்களின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

1) திருமதி.வி.மீனாள் – 4.95 % மதிப்பீட்டை விட கூடுதல்
2) திரு. ஏ.ராமையா – 10.00 % மதிப்பீட்டை விட கூடுதல்

பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.95 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.வி.மீனாள், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்.16516 / 2017 / இ 4)

**அலுவலக குறிப்பு**

1) ஷை பணிக்கு ரூ.476.02 இலட்சம் இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 21422/ 2017/ இ3, நாள் 3.10.2017 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

2) பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.95 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி.வி.மீனாள், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**<u>தீர்மானம் எண்: 945</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---

7) திண்டுக்கல் மாநகராட்சி துாய்மை இந்தியா இயக்கம் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வாகனங்கள் வாங்குதல் மற்றும் உரம் தயாரிக்கும் பணிக்காக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16099–1/2016/ பி3 , நாள் 4.7.2016 ன்படி கீழ்க்கண்டவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு அதற்கான தேர்வு செய்து பணிகள் நடைபெற்று வருகிறது.

| Sl. No | Name of Work | Estimate Amount Rs.in lakhs |
|---|---|---|
| 1 | Purchase of vehicle for Primary Collection | 159.60 |
| 2 | Purchase of vehicle for Secondary Collection | 38.00 |
| 3 | Infrastructure works on Ponnumanthurai Package- I | 435.00 |
| 4 | Infrastructure works on Ponnumanthurai Package- II | 477.75 |
| 5 | Infrastructure works on Murugabavanam Package- III | 204.50 |
| 6 | IEC Activities | 24.65 |
| | **Total** | **1389.50** |

மேற்படி திட்டப் பணியில் வ.எண்.1, 2, 4 மற்றும் 5 ஆகிய பணிகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு வ.எண். 1, 2 ல் குறிப்பிட்ட முதற்கட்ட மற்றும் இரண்டாம்

கட்ட சேகரிப்பு வாகனங்கள் வாங்கும் பணிகள் முடிக்கப்பட்டும், 5 மற்றும் 6 ஆகிய பணிகள் நடைபெற்ற வருகிறது. வ.எண்.3 ல் குறிப்பிட்டுள்ள பணியான பொன்னுமாந்துறை பகுதியில் உட்கட்டமைப்பு அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான இயந்திரங்களை பொருத்தமான தொழில்நுட்பத்துடன் ரூ.435.00 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கும் பணிக்கு அதற்கான நவீன தொழில்நுட்பம் தேர்வு செய்யப்பட்டு வருவதால் அப் பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்படாத நிலை உள்ளது. வ.எண்.4 ல் குறிப்பிடப்பட்டுள்ள பணியான பொன்னுமாந்துறை பகுதியில் உள்ள மாநகராட்சிக்கு சொந்தமான குப்பைக்கிடங்கு இடத்தில் நவீன முறையில் உரம் தயாரிக்கும் பணிக்கான கட்டுமான அமைப்புகள் அமைப்பதற்கு ரூ.477.75 இலட்சத்தில் பணிகள் மேற்கொள்ள திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.5840/2016/ எச்1, நாள் 10.5.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு, பணிகள் துவக்கப்படும் பொழுது அப்பகுதி பொதுமக்கள் அவ்விடத்தில் உரம் தயாரிக்கும் பணிகள் துவங்க எதிர்ப்பு செய்ததன் காரணமாக பணிகள் துவங்க இயலவில்லை. மேலும் மேற்படி இடத்தில் உரம் தயாரிக்கும் பணிக்கான கட்டுமான அமைப்புகள் துவக்கும் பொருட்டு அப்பகுதியில் வசிக்கும் பொதுமக்களிடம் மாநகராட்சி மூலமும் வருவாய்த்துறை மூலமும் அமைதிப் பேச்சு வார்த்தை நடத்தியதில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை. இதனால் பணி துவங்க முடியாத நிலையில் உள்ளது. மேலும் ஏற்கனவே செயல்பட்டு வரும் முருகபவனம் குப்பைக்கிடங்கிலும் அதிகமான குப்பைகள் சேர்ந்துள்ளதால் அவற்றில் தொடர்ந்து நகரில் சேரும் குப்பைகளை முழுமையாக கொட்டி உரம் தயார் செய்ய இயலாத நிலை உள்ளது. மேலும் முருகபவனம் குப்பைக்கிடங்கு அருகில் குடியிருக்கும் பொதுமக்கள் அங்கு குப்பைகள் கொட்ட எதிர்ப்பு தெரிவித்தும் நீதிமன்றம் மூலம் அதனை அப்புறப்படுத்தவும் கோரி வருகின்றனர். நகரில் அன்றாடம் சேகரிக்கும் திடக்கழிவுகளை தற்போது செயல்பட்டு வரும் குப்பைக் கிடங்கில் தொடர்ந்து கொட்ட இயலாத நிலை உள்ளதாகவும், எனவே நகரில் ஆங்காங்கு காலியாக உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் Decentralized Micro Composting Centre (ஒருங்கிணைந்த நுண்ணுரம் தயார் செய்தல் மையங்கள்) அமைக்க இடங்கள் தேர்வு செய்து செயல்படுத்திட அவ்விடங்களில் சேகரிக்கப்படும் திடக்கழிவுகள் அளவுடன் அதற்கான பிரேரணைகள் தயார் செய்தும் மேலும் அவ்விடங்களில் (Micro Composting Centre)

நுண்ணுரம் தயாரிக்கத் தேவையான கட்டமைப்பு வதிகள் ஏற்படுத்தி தருமாறும் அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயார் செய்து செயல்படுத்தி தருமாறு மாநகராட்சி சுகாதார பிரிவிலிருந்து 21.09.2017 ம் தேதிய குறிப்பில் கோரப்பட்டுள்ளது.

| வ. எண் | இடத்தின் பெயர் | வார்டு விபரம் | நுண்ணுயிர் மையத்தின் திறன் (மெ.டன் ) |
|---|---|---|---|
| 1 | முருகபவனம் உரக்கிடங்கு | 1, 2, 9, 10 (பா) | 5 |
| 2 | வாகன நிறுத்துமிடம் | 10 (பா),11,20, 21, 24, 25,23 (பா) | 5 |
| 3 | ஆர்.எம்.காலனி கூடை பந்தாட்ட மைதானத்திற்கு அருகில் | 3, 4, 5 | 4 |
| 4 | கோவிந்தாபுரம் மயானம் | 6, 7, 8, 12 | 5 |
| 5 | அண்ணா நகர் | 13, 14, 15 | 5 |
| 6 | ராம் நகர் | 16, 31 | 3 |
| 7 | கக்கன் நகர் | 17, 18, 19, 30 | 5 |
| 8 | வத்தலக்குண்டு சாலை | 22, 23 (பா), 38, 39, 40, | 5 |
| 9 | வேடபட்டி மயானம் | 26, 27, 32, 33, 34 | 5 |
| 10 | சந்தைப் பேட்டை | 28, 29, 35, 36, 37, | 5 |
| 11 | பூச்சிநாயக்கன்பட்டி | 41, 42, 43, 44, 45 (பா) | 5 |
| 12 | கேஎம்எஸ் நகர் | 45 (பா), 46,47, 48 | 5 |

அதன் அடிப்படையிலும் தற்போதுள்ள குப்பைக் கிடங்கிலும் தொடர்ந்து திடக்கழிவுகளை கொட்டி உரமாக்கிட இயலாத நிலையில் இருப்பதாலும் மாநகராட்சி சுகாதார பிரிவின் கோரிக்கைக்கேற்ப நகரில் அன்றாடம் சேகரிக்கும் திடக்கழிவுகளை உரமாக்கிட ஏதுவாக நகரில் ஆங்காங்கு உள்ள மாநகராட்சிக்குச் சொந்தமான கீழ்க்கண்ட இடங்களில் திடக்கழிவுகளை உரமாக்கிட அதற்கான கட்டுமான அமைப்புகள் ஏற்படுத்தி செயல்படுத்த திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | நுண்ணுயிர் மைய இடத்தின் பெயர் | நுண்ணுயிர் மையத்தின் திறன் (மெ.டன் ) | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|
| | **சிப்பம் – 1** | | |
| 1 | முருகபவனம் உரக்கிடங்கு | 5 | 70.00 |
| 2 | வாகன நிறுத்துமிடம் | 5 | 73.00 |
| 3 | ஆர்.எம்.காலனி கூடை பந்தாட்ட | 4 | 67.50 |

| | | | |
|---|---|---|---|
| | மைதானத்திற்கு அருகில் | | |
| 4 | கோவிந்தாபுரம் மயானம் | 5 | 67.50 |
| 5 | அண்ணா நகர் | 5 | 70.00 |
| 6 | ராம் நகர் | 3 | 52.00 |
| | **சிப்பம் – 2** | | |
| 1 | கக்கன் நகர் | 5 | 73.50 |
| 2 | வத்தலக்குண்டு சாலை | 5 | 73.50 |
| 3 | வேடபட்டி மயானம் | 5 | 67.50 |
| 4 | சந்தைப் பேட்டை | 5 | 73.50 |
| 5 | பூச்சிநாயக்கன்பட்டி | 5 | 73.50 |
| 6 | கேஎம்எஸ் நகர் | 5 | 73.50 |

நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 16099–1/2016/ பி3 , நாள் 4.7.2016 ன்படி திடக்கழிவு மேலாண்மை மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உரம் தயாரிக்கும் பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட வ.எண்.3 மற்றும் 4ல் கண்ட மதிப்பீட்டுத் தொகையான முறையே ரூ.435.00 இலட்சம் மற்றும் ரூ.477.75 இலட்சம் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால், தற்பொழுது நுண்ணுரம் செயலாக்க மையம் அமைக்கும் பணிகளுக்கு மேற்படி இடங்களில் நுண்ணுரம் தயாரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட பணிகளை கீழ்க்கண்டவாறு இரண்டு சிப்பங்களாக சிப்பம்–1 மற்றும் சிப்பம்–2 பணிகளுக்குரிய மதிப்பீட்டுத் தொகையான ரூ.400.00 மற்றும் ரூ.435.00 இலட்சத்தில் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட திட்டப் பிரேரணைகளுக்கு மாமன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது.

மேலும் ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நடைபெறாத நிலையில் உள்ள பணிகளுக்குப் பதிலாக மாற்றுப் பணிகளான நுண்ணுரம் செயலாக்க மையம், சுற்றுச் சுவர் மற்றும் அணுகு சாலை அமைக்கும் பணிகளுக்கு கீழ்க்கண்டவாறு திருத்திய நிர்வாக அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | ஏற்கனவே நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட பணியின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் | திருத்திய நிர்வாக அனுமதிக்கான பணி விபரம் | மதிப்பீட்டுத் தொகை ரூ.லட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | பொன்னுமாந்துறையில் உர மேடை, சுற்றுச்சுவர், உட்புற சாலை மற்றும் தண்ணீர் வசதி செய்யும் பணி | 477.75 | <u>சிப்பம் – 1</u><br>முருகபவனம் உரக்கிடங்கு, வாகன நிறுத்துமிடம், ஆர்.எம்.காலனி கூடை பந்தாட்ட மைதானத்திற்கு அருகில், கோவிந்தாபுரம் மயானம் , அண்ணா நகர் மற்றும் ராம் நகர் ஆகிய 6 இடங்களில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre), சுற்றுச் சுவர் மற்றும் அணுகு சாலை அமைக்கும் பணி | 400.00 |
| 2 | பொன்னுமாந்துறையில் வளர் மீட்பு மையம், உரம் முன் தயாரிப்பு நிலையம் , இயந்திரம் பொருத்தப்படவுள்ள பகுதிகளில் மேற்கூரை அமைத்தல் மற்றும் சுகாதார வளாகம் கட்டும் பணி | 435.00 | <u>சிப்பம் – 2</u><br>கக்கன் நகர், வத்தலக்குண்டு சாலை, வேடபட்டி மயானம், சந்தைப் பேட்டை, பூச்சிநாயக்கன்பட்டி, மற்றும் கேஎம்எஸ் நகர் ஆகிய 6 இடங்களில் நுண்ணுரம் செயலாக்க மையம் (Micro Composting Centre), சுற்றுச் சுவர் மற்றும் அணுகு சாலை அமைக்கும் பணி | 435.00 |

**( ந.க.எண். 16495 /2017/இ4 )**

<u>அ.குறிப்பு</u>

1) அனுமதி வழங்கலாம் .
2) திண்டுக்கல் மாநகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உரம் தயாரிக்கும் பணிக்கு ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட வ.எண்.3 மற்றும் 4ல் கண்ட மதிப்பீட்டுத் தொகையான முறையே ரூ.435.00 இலட்சம் மற்றும் ரூ.477.75 இலட்சம் பணிகள் மேற்கொள்ள இயலாத நிலை உள்ளதால், தற்பொழுது நுண்ணுரம் செயலாக்க மையம், சுற்றுச் சுவர் மற்றும் அணுகு சாலை அமைக்கும் பணிகளுக்கு தயார் செய்யப்பட்ட சிப்பம்–1 மற்றும் சிப்பம்–2 பணிகளுக்குரிய மதிப்பீட்டுத் தொகையான ரூ.400.00 மற்றும் ரூ.435.00 இலட்சத்தில் தயார் செய்யப்பட்டுள்ள பணிகளுக்கான திருத்திய நிர்வாக அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு பிரேரணைகள் சமர்ப்பிக்க அனுமதி வழங்கலாம்.

**<u>தீர்மானம் எண்: 946</u>** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**8)** திண்டுக்கல் மாநகராட்சி பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டப்பணிகளை மேற்கொள்வதற்கு தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் ரூ. 19.95 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டு இரண்டு கட்டமாக (phase-I, phase-II) மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு முதற்கட்டமாக வார்டு எண்.2, 3, 4, 5, 6 ,7, 8, 9, 11(பகுதி) 12, 13, 14, 15, 16, 19, 20, 21, 22 (பகுதி) 24, 25, 26(பகுதி) 27, 28(பகுதி) மற்றும் 38(பகுதி)யில் பாதாள சாக்கடை அமைப்பு ஏற்படுத்தும் பணியும் பள்ளப்பட்டி கிராமத்தில் 13.65 MLD கொள்ளளவு கொண்ட கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் பணியும் அமைக்க உத்தேசிக்கப்பட்டு அதற்கான திட்டப்பணிக்கு திருத்திய நிர்வாக அனுமதியாக ரூ.46.15 கோடிக்கு அரசாணை எண்.554ல் ஒப்புதல் அளிக்கப்பட்டு அப்பணியை மூன்று சிப்பங்களாக (Package-I, II, III) மேற்கொள்ளப்பட்டு சிப்பம் I மற்றும் III பணிகள் முடிவடைந்து அப்பணிகள் செயல்பாட்டில் உள்ளது. சிப்பம் 1ல் முழுமையாக பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் இணைப்பு வழங்கும் பணி முடிவடைந்து உள்ளது. சிப்பம் IIல் பணிகள் முடிவடைந்து பாதாள சாக்கடை கழிவுநீர் குழாய் இணைப்புகள் வழங்கும் பணி நடை பெற்று வருகிறது.

மேலும் சவரியார் பாளையத்தில் IHSDP திட்டத்தின்கீழ் மதிப்பீடு ரூ. 140.00 இலட்சத்தில் பாதாள சாக்கடை திட்டப்பணிகள் முடிவடைந்துள்ளது. இத்திட்டம் முடிவடைந்த பகுதிகளில் மொத்தம் 19205 வரிவிதிப்புகள் உள்ளது. மேற்படி பகுதிகளில் உள்ள வீடுகளுக்கு வீடுகளிலிருந்து இணைப்பு செய்யும் பொருட்டு மொத்தம் 12567 எண்ணிக்கை வீடுகளுக்கு திட்டத்தின் மூலம் அமைப்புகள் அமைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 6638 வீடுகளுக்கு அமைப்புகள் அமைக்க வேண்டியுள்ளது. மேற்படி திட்டத்தின்மூலம் அமைக்கப்பட்ட 12567 இணைப்பு அமைப்புகளில் இதுவரை 8229 வீடுகளுக்கு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது. மேலும், 1042 வீடுகளுக்கு இணைப்புகள் விண்ணப்பம் பெறப்பட்டு இணைப்புகள் வழங்கப்படும் நிலை உள்ளது. மீதம் உள்ள 3286 வீடுகளுக்கு தொட்டி அமைத்து நேரடியாக இணைப்புகள் பெறவும் திட்டத்தின் மூலம் வீட்டிணைப்புகள் நேரடியாக பெற ஆய்வுத் தொட்டியிலிருந்து வீடு வரை அமைப்புகள் அமைக்கப்படாமல் உள்ள கட்டிடத்திற்கு ஆய்வுத் தொட்டியிலிருந்து வீடு வரை அமைப்புகள் அமைத்து இணைப்புகள் பெறவும் வேண்டியுள்ளது.

பாதாள திட்ட இணைப்புகள் பெற பொதுமக்களிடமிருந்து உடன் இணைப்புகள் கிடைக்கப் பெறாததால் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அதன் முழுக் கொள்ளளவுக்கு இயக்க இயலாத நிலை ஏற்படுவதுடன் கழிவுநீர் தேங்குவதால் சுகாதார பாதிப்பு ஏற்படுகிறது. ஏனவே மேற்படி பகுதிகளில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் பாதாள சாக்கடைத் திட்ட இணைப்புகள் உடன் பெறும் பொருட்டு, மேற்படி இணைப்புகள் அமைக்க ரூ.450.00 இலட்சத்திற்கு திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை நிதி நிறுவனங்களிடமிருந்தோ வட்டியில்லா கடனாக பெற்று திட்டத்தினை செயல்படுத்திடவும் அதற்கான செலவுகளை வீட்டின் உரிமையாளர்களிடமிருந்து சொத்துவரியுடன் கேட்பாக சேர்த்து தவணை முறையில் வசூல் செய்து நிதி நிறுவனத்திற்கு செலுத்திடவும் அதற்கான பிரேரணைகள் அனுப்பவும் மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டுள்ளது.

ந.க.எண்.2855/2013/இ4

அலுவலகக் குறிப்பு

1) அனுமதிக்கலாம்
2) மேற்படி திட்டத்திற்கான மதிப்பீடு தொகை ரூ.450.00 இலட்சத்தினை தமிழ்நாடு நகர்ப்புற உட்கட்டமைப்பு நிதி சேவை நிறுவனத்திடம் (TUFIDCO) வட்டியில்லா கடனாகப் பெறவும் , அதனை உரிமையாளர்களிடமிருந்து வசூல் செய்து தவணை முறையில் செலுத்தவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
3) மேற்படி திட்டத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கருத்துரு சமர்ப்பிக்கலாம்.

<u>**தீர்மானம் எண்: 947**</u> அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

---